மங்கள விநாயகர் கோயில் குடமுழுக்கு

சிங்கம்புணரி, ஆக. 28: சிங்கம்புணரி அஞ்சல் அலுவலகம் பின்புறம் அமைந்துள்ள மங்கள விநாயகர் கோயில் குடமுழுக்கு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சிங்கம்புணரி மங்கள விநாயகர் கோயிலில் குடமுழுக்கையொட்டி, கலசத்தில் புனிதநீர் ஊற்றிய சிவாசாரியர்கள்.

இந்தக் கோயிலில் கடந்த 14-ஆம் தேதி பந்தல்கால் நடும் விழா நடைபெற்றது. இதைத் தொடர்ந்து, வியாழக்கிழமை யாகசாலை அமைத்து சிவாசாரியர்கள் வேதமந்திரங்களை முழங்கினர். வெள்ளிக்கிழமை காலை 9.35 மணிக்கு யாகசாலையிலிருந்து கடம் புறப்பட்டு, மங்கள விநாயகர் கோயிலை வலம் வந்தது.

இதையடுத்து, சிவாசாரியர்கள் வேத மந்திரங்கள் முழங்க காலை 10 மணிக்கு கலசங்களுக்கு புனித நீர் ஊற்றி குடமுழுக்கு நடைபெற்றது.

இதைத்தொடர்ந்து, மங்கல விநாயகருக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் செய்யப்பட்டு தீபாராதனை காட்டப்பட்டது.

இதில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் ராம அருணகிரி, சிங்கம்புணரி பேரூராட்சித் தலைவர் அம்பலமுத்து, துணைத் தலைவர் இந்தியன் செந்தில், தொழிலதிபர் சிவகுமார் உள்ளிட்ட திரளான பக்தர்கள் கலந்து கொண்டு விநாயகரை தரிசனம் செய்தனர்.

மந்தையம்மன் கோயில் முளைப்பாரித் திருவிழா

பரமக்குடி/ மானாமதுரை, ஆக. 28: பரமக்குடி அருகேயுள்ள பி.புத்தூர் கிராமத்தில் மந்தையம்மன் கோயில் முளைப்பாரித் திருவிழா வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கோயில் திருவிழா கடந்த 19-ஆம்தேதி காப்புக்கட்டுதலுடன் தொடங்கியது. இதையொட்டி, நாள்தோறும் இரவு மந்தையம்மன் கோயிலில் பெண்களின் கும்மியாட்டமும், ஆண்களின் ஒயிலாட்டமும் நடைபெற்றது. கடந்த ஞாயிற்றுக்கிழமை திருவிளக்கு பூஜை நடைபெற்றது. இதைத்தொடர்ந்து வியாழக்கிழமை விரதமிருந்த பெண்களும், ஆண்களும் முளைப்பாரியை சுமந்து சென்று அங்குள்ள கண்மாயில் கரைத்தனர்.

மானாமதுரை: சிவகங்கை மாவட்டம், மானாமதுரை அருகேயுள்ள கீழப்பசலை மாரியம்மன் கோயில் உத்சவ விழாவை முன்னிட்டு, முளைப்பாரி ஊர்வலம் வியாழக்கிழமை நடைபெற்றது.

பி.புத்தூர் கிராமத்தில் முளைப்பாரியை ஊர்வலமாக எடுத்துச் சென்ற பெண்கள். (வலது) சிறப்பு அலங்காரத்தில் மந்தையம்மன்.

இந்தக் கோயில் உத்சவ விழா கடந்த வாரம் காப்புக் கட்டுதலுடன் தொடங்கியது. அப்போது ஏராளமான பெண்கள் விரதமிருந்து முளைப்பாரிகளை வளர்த்தனர்.

விழா நாள்களில் நாள்தோறும் இரவு பெண்கள் கோயிலில் கூடி முளைப்பாரிகளை வைத்து கும்மிப் பாடல்களைப் பாடினர்.

இதையடுத்து, வியாழக்கிழமை பெண்கள் கோயிலிலிருந்து முளைப்பாரிகளை தலையில் சுமந்து கீழப்பசலை தெருக்களில் ஊர்வலமாக வந்து கண்மாயில் கரைத்தனர்.

ரூ.1.70 லட்சம் பறிமுதல்

வட்டார வளர்ச்சி அலுவலர் உள்பட 5 பேர் மீது வழக்கு

ராமேசுவரம், ஆக. 28: மண்டபம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உரிய ஆவணங்களின்றி வைத்திருந்த ரூ.1.70 லட்சத்தை ஊழல் தடுப்பு, கண்காணிப்புப் பிரிவு போலீஸார் வியாழக்கிழமை பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக வட்டார வளர்ச்சி அலுவலர் உள்பட 5 பேர் மீது போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வியாழக்கிழமை மாலை 3 மணி முதல் இரவு 10 மணி வரை ஊழல் தடுப்பு கண்காணிப்புப் பிரிவு போலீஸார் சோதனை நடத்தினர்.

அப்போது, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அன்புக்கண்ணனிடமிருந்து ரூ.38,500, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்-1 முனியராஜிடம் ரூ.5,000, ஒப்பந்ததாரர்கள் உதயகுமாரிடம் ரூ.90 ஆயிரம், ரவீந்திரனிடம் ரூ.33,500, நல்லுச்சாமியிடம் ரூ.5,000 ஆக மொத்தம் உரிய ஆவணங்களின்றி வைத்திருந்த ரூ.1.72 லட்சம் கைப்பற்றப்பட்டது.

இதைத்தொடர்ந்து, இவர்கள் 5 பேர் மீது ஊழல் தடுப்பு, கண்காணிப்புப் பிரிவு போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இதுதவிர அங்கு பணிபுரியும் அலுவலர்கள் இணைய வழியில் ரூ.33 லட்சம் வரையில் பணப் பரிவர்த்தனை செய்ததும் கண்டறியப்பட்டது. இதுதொடர்பாக அவர்களிடம் விசாரணை நடைபெற்று வருகிறது.

அரசுப் பணியாளர் தேர்வுகளுக்கு இலவசப் பயிற்சி

சிவகங்கை, ஆக. 28: தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படவுள்ள குரூப் 2, 2-ஏ முதல்நிலை தேர்வுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகள் சிவகங்கையிலுள்ள மாவட்ட வேலைவாய்ப்பு, தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு குரூப் 2, 2 ஏ முதல் நிலை போட்டித் தேர்வுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகள் சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு, தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் ஆக.28 முதல் நடத்தப்படுகிறது.

இந்தப் பயிற்சி வகுப்புகளில் வாரந்தோறும் மாதிரித் தேர்வுகள் நடத்தப்படும். மேலும், இந்தப் பயிற்சி வகுப்புகள் தொடர்பாக விவரங்களை நேரிலும் அல்லது அலுவலக தொலைபேசி எண் 04575-240435, studycirclestudentsvg@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியிலும் தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

சிவகங்கையில் தொல்லியல் பயண நூல் வெளியீடு

சிவகங்கை, ஆக. 28: சிவகங்கை தமிழவையம், சிவகங்கை தொல்நடைக் குழு இணைந்து மரபுக் கண்காட்சி, தொல்லியல் பயண நூல் வெளியீட்டு விழாவை புதன்கிழமை நடத்தின.

சிவகங்கை சிவன் கோயில் எதிரிலுள்ள தனியார் அரங்கில் நடைபெற்ற விழாவுக்கு, சிவகங்கை தமிழவையத் தலைவர் சொ. பகீரத நாச்சியப்பன் தலைமை வகித்தார். சிவகங்கை தொல்நடைக் குழு செயற்குழு உறுப்பினர் வித்யா கணபதி முன்னிலை வகித்தார். தொல்லியல் பயணம் என்ற நூலை தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் சிவப்பிரகாஷ் வெளியிட்டார். தொல்நடைக் குழுத் தலைவரும், மன்னர் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியருமான சுந்தரராஜன் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்.

சிவகங்கையில் தமிழவையம் தொல்நடைக் குழு இணைந்து நடத்திய விழாவில் தொல்லியல் பயண நூலை வெளியிட்ட தமிழ் வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் சிவபிரகாஷ்.

இந்த நூல் குறித்து சிவகங்கை தொல்நடைக் குழு நிறுவனர் புலவர் கா. காளிராசா மதிப்புரையாற்றினார். நூலாசிரியர் நல. ஞானபண்டிதன் ஏற்புரையாற்றினார். இந்த நிகழ்வுக்கு, சிவகங்கை தமிழ்ச் சங்கத் தலைவர் ஓவியர் முத்துக்கிருஷ்ணன், திருப்பத்தூர் நூலக வாசகர் வட்டத் தலைவர் ஜெயச்சந்திரன், மூத்த வழக்குரைஞர் ராம்பிரபாகர் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

சிவகங்கை தொல்நடைக்குழு செயலர் நரசிம்மன் வரவேற்றார். நிகழ்வை சிவகங்கை தமிழவைய பொருளாளர் ஜெயப்பிரியா தொகுத்தளித்தார். சிவகங்கை தமிழவையச் செயலர் கா. சுரேஷ் நன்றி கூறினார்.

இந்த நிகழ்வில் தேசிய நல்லாசிரியர் கண்ணப்பன், அரசு அருங்காட்சியக முன்னாள் காப்பாட்சியர் பக்கிரிசாமி, அரிமா சங்க நிர்வாகிகள் ரமேஷ் கண்ணா, பாண்டி, முத்துக்குமரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வழிவிடுமுருகன் கோயில் 50-ஆம் ஆண்டு விழா

ராமேசுவரம், ஆக. 28: ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரம் மீன்பிடி துறைமுகம் பகுதியில் அமைந்துள்ள கடற்கரை வழிவிடு முருகன் கோயில் பிரதிஷ்டை செய்யப்பட்டதன் 50-ஆம் ஆண்டு விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதை முன்னிட்டு முருகனுக்கு பால், பழம், பஞ்சாமிர்தம் உள்ளிட்ட 16 வகையான பொருள்களால் சுவாமிக்கு அபிஷேகம் நடைபெற்றது. பக்தர்கள் பால்குடம் எடுத்து வந்தனர்.

இதைத்தொடர்ந்து, தவெக கட்சியினர் ஏற்பாட்டில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதை நகர் பொறுப்பாளர் பொன் பஞ்சா தொடங்கி வைத்தார். இதில், திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

காரைக்குடி, விருதுநகர், சிவகாசி பகுதிகளில் இன்று மின் தடை

காரைக்குடி/ விருதுநகர்/ சிவகாசி, ஆக. 28: காரைக்குடி, விருதுநகர், சிவகாசி ஆகிய பகுதிகளில் சனிக்கிழமை (ஆக. 29) மின் தடை ஏற்படும் என அறிவிக்கப்பட்டது.

இதுகுறித்து காரைக்குடி மின் வாரிய செயற்பொறியாளர் எம்.லதா தேவி வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

காரைக்குடி துணை மின் நிலையத்தில் சனிக்கிழமை மாதாந்திர பராமரிப்புப் பணிகள் நடைபெறுகின்றன.

எனவே காரைக்குடி நகர், பேயன்பட்டி, வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு, செக்காலைக்கோட்டை, பாரி நகர், கல்லூரிச் சாலை, செக்காலைச் சாலை, புதிய பேருந்து நிலையம், பழைய பேருந்து நிலையம், கல்லுக்கட்டி, செஞ்சை, கோவிலூர் சாலை, இதன் சுற்றுப்புறப்பகுதிகளில் சனிக்கிழமை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை மின் விநியோகம் இருக்காது என்றார் அவர்.

விருதுநகர்: விருதுநகர் மின் கோட்ட செயற்பொறியாளர் முரளீதரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விருதுநகர் துணை மின் நிலையத்தில் மாதாந்திரப் பராமரிப்புப் பணிகள் நடைபெற உள்ளதால், விருதுநகர் பழைய பேருந்து நிலையம், மேற்கு ரதவீதி, முத்துராமலிங்கம்நகர், இந்திராநகர், பாண்டியன் குடியிருப்பு, குல்லூர்சந்தை, அல்லம்பட்டி, என்.ஜி.ஓ. நகர், பேராலி சாலை, இதைச் சுற்றியுள்ள பகுதிகளில் சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின் விநியோகம் இருக்காது என்றார் அவர்.

சிவகாசி: சிவகாசி மின் கோட்ட செயற்பொறியாளர் பாபநாசம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

சிவகாசி மின்கோட்டம், சாட்சியாபுரம் துணை மின் நிலையத்தில் மாதாந்திரப் பராமரிப்புப் பணிகள் நடைபெற உள்ளதால், ஆனையூர், விளம்பட்டி, வீட்டு வசதி வாரிய குடியிருப்பு கிச்சநாயக்கன்பட்டி, லட்சுமியாபுரம், அய்யம்பட்டி, மாரனேரி, ஊராம்பட்டி, பெரியபொட்டல்பட்டி, ஏ.துலுக்கபட்டி, போடுரெட்டியபட்டி, சாட்சியாபுரம், தொழில்பேட்டை, காவலர் குடியிருப்பு, அய்யப்பன் குடியிருப்பு, அய்யனார் குடியிருப்பு, சசிநகர், சித்துராஜபுரம் ,வேலாயுதம் சாலை, இதைச் சுற்றியுள்ள பகுதிகளில் சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை மின் விநியோகம் இருக்காது என்றார் அவர்.

பெண் தற்கொலை

சிவகாசி, ஆக. 28: சிவகாசி அருகே வெள்ளிக்கிழமை பெண் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

சிவகாசி அருகேயுள்ள துலுக்கப்பட்டியைச் சேர்ந்தவர் ஹரிசந்திரன். இவர் கிராம நிர்வாக அலுவலராகப் பணிபுரிந்து வருகிறார். இவரது மனைவி முத்துமாரி (42). இவர்களுக்கு இரு ஆண் குழந்தைகள் உள்ளனர்.

இந்த நிலையில், கடந்த சில நாள்களாக முத்துமாரி உடல் நிலை சரியில்லாமல் இருந்து வந்தாராம். இதனால், மனமுடைந்து காணப்பட்டு வந்த அவர் வெள்ளிக்கிழமை வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து மாரனேரி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

இன்றைய நிகழ்ச்சிகள்

பரமக்குடி

வன்னிமரத்தெரு ஸ்ரீபஞ்சமுக ஆஞ்சநேயர் கோயிலில் அனுமன் சுவாமிக்கு வடமாலை சாத்தி சிறப்பு அபிஷேகம், மாலை 6.

சிவகாசி

அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரியில்: இயற்பியல்துறை சார்ந்த சிறப்பு சொற்பொழிவு, நிகழ்த்துபவர்-விருதுநகர் செந்திக்குமாரநாடார் கல்லூரி இணைப் பேராசிரியர் த.பிரிதிவிராஜன், தலைமை-முதல்வர் செ.அசோக், கருத்தரங்கக்கூடம், காலை 9.30.

ராஜபாளையம் ராமசுவாமி கோயில்: சனி வார வழிபாடு, காலை 10.

பொது அறிவிப்புக்கான திருத்தம் - ஐந்தாவது மின்-ஏலம், நாள் 08.08.2026
IVRCL லிமிடெட் கலைப்பு நடவடிக்கையின் கீழ்
திவால் மற்றும் நொடித்துநிலை சட்டம், 2016-இன் படி
மின்னஞ்சல் முகவரி: ivrcl.liquidation@gmail.com, www.ivrcl.com

திருத்தம்
திவால் மற்றும் நொடிப்பு நிலை சட்டம், 2016-இன் கீழ் சொத்து விற்பனை

கீழ்க்கையொப்பமிட்டவரால் 08.08.2026 அன்று மின்-ஏலம் மூலம் IVRCL லிமிடெட் விற்பனைக்காக வெளியிடப்பட்ட ஏல விற்பனை அறிவிப்பு தொடர்பாக, அந்தச் செயல்முறையின் காலக்கெடு பின்வருமாறு திருத்தப்படுகிறது. இந்த விற்பனையானது, கீழே கையொப்பமிட்டவரால் https://ibbi.baanknet.com/eauction-ibbi/home என்ற இணையதளத்தில் உள்ள மின்-ஏலத் தளம் வழியாக நடத்தப்படும்.
விற்பனையின் சுருக்கமான விவரங்கள் பின்வருமாறு:

விவரம்	ஏல அறிவிப்பின்படி	திருத்தப்பட்டபடி
பிரிவு A - இயங்கிவரும் ஒரு நிறுவனமாக பெருநிறுவனக் கடன்தாரர் விற்பனை சொத்துத் தொகுப்பு 1: இயங்கிவரும் ஒரு நிறுவனமாக பெருநிறுவனக் கடன்தாரர் விற்பனை **"உள்ளது உள்ளபடி", "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ள நிலையில்", "உள்ளது என்னவோ அது"** மற்றும் **"எந்தப் பொறுப்பேற்பும் இன்றி"** என்ற அடிப்படையில்	01.09.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை	17.09.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை
பிரிவு B - பெருநிறுவனக் கடன்தாரர் முதலீடுகளின் விற்பனை (பிரிவு A-இன் கீழ் ஏலத்துக்கு எந்த ஏல புள்ளியும் பெறப்படாத பட்சத்தில்) சொத்துத் தொகுப்பு 2: பெருநிறுவனக் கடன்தாரர் சொத்துக்களின் ஒரு பகுதியாக இருக்கும் சேலம் டோல்வேஸ் லிமிடெட் மற்றும் குமார்பாளையம் டோல்வேஸ் லிமிடெட் (SPV-கள்) ஆகியவற்றில் உள்ள பெருநிறுவனக் கடன்தாரர் முதலீடுகளின் விற்பனை **"உள்ளது உள்ளபடி", "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ள நிலையில்", "உள்ளது என்னவோ அது"** மற்றும் **"எந்தப் பொறுப்பேற்பும் இன்றி"** என்ற அடிப்படையில் **சொத்துத் தொகுப்பு 3:** பெருநிறுவனக் கடன்தாரரர் சொத்துக்களின் ஒரு பகுதியாக இருக்கும் IOT உத்கல் எனர்ஜி சர்வீசஸ் லிமிடெட்டில் உள்ள பெருநிறுவனக் கடன்தாரரர் பங்குகளின் விற்பனை **"உள்ளது உள்ளபடி", "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ள நிலையில்", "உள்ளது என்னவோ அது"** மற்றும் **"எந்தப் பொறுப்பேற்பும் இன்றி"** என்ற அடிப்படையில்	01.09.2026 அன்று பிற்பகல் 02.00 மணி முதல் பிற்பகல் 04.00 மணி வரை	17.09.2026 அன்று பிற்பகல் 02.00 மணி முதல் பிற்பகல் 04.00 மணி வரை
பிரிவு C - பெருநிறுவனக் கடன்தாரரர் முதன்மை அல்லாத சொத்துக்களின் விற்பனை (பிரிவு A-இன் கீழ் ஏலத்துக்கு எந்த ஏல புள்ளியும் பெறப்படாத பட்சத்தில்) சொத்துத் தொகுப்பு 4: "முதன்மை அல்லாத சொத்துக்கள் பகுதி 1"-இல் மேலும் பட்டியலிடப்பட்டுள்ளபடி, பெருநிறுவனக் கடன்தாரரர் முதன்மை அல்லாத சொத்துக்களின் பகுதியாக இருக்கும் தனிப்பட்ட சொத்து(களின்) விற்பனை **"உள்ளது உள்ளபடி", "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ள நிலையில்", "உள்ளது என்னவோ அது"** மற்றும் **"எந்தப் பொறுப்பேற்பும் இன்றி"** என்ற அடிப்படையில்	01.09.2026 அன்று பிற்பகல் 02.00 மணி முதல் பிற்பகல் 04.00 மணி வரை	17.09.2026 அன்று பிற்பகல் 02.00 மணி முதல் பிற்பகல் 04.00 மணி வரை
ஆவணங்கள் மற்றும் டேவணித் தொகை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	30.08.2026 மாலை 05:00 மணிக்கு முன்.	15.09.2026 மாலை 05:00 மணிக்கு முன்.
இடத்துக்கு நேரில் செல்லல்	08.08.2026 முதல் 30.08.2026 வரை **காலை 10:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை.**	15.09.2026 வரை **காலை 10:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை.**

மற்ற எந்த விதிமுறைகளிலும் நிபந்தனைகளிலும் எந்த மாற்றங்களும் இல்லை

தேதி: ஆகஸ்ட் 29, 2026
இடம்: ஹைதராபாத்

புருஷோத்தம் பெஹோரா
IVRCL லிமிடெட்டின் கலைப்பு அலுவலர்
பதிவு எண். IBBI/IPA-002/IP-N00940/2019-2020/12993
மின்னஞ்சல் முகவரி – ivrcl.liquidation@gmail.com

CHANGE OF NAME

I, NIVETHA ARAVIND W/O. Aravind, D/O. Ramachandran, residing at 65/J2, Ayyanar Illam, Mangalanayaki compound, Mandapam Main Road, Iravathanallur, Munichalai P.O., Madurai - 625009 shall henceforth be known as NIVETHA RAMACHANDRAN.

Madurai
28.08.2026 NIVETHA ARAVIND

சுந்தரம் ஹோம்
- சுந்தரம் ஃபைனான்ஸ் குழுமம் -

பதிவு அலுவலகம்: எண் 21, பட்டுல்லாஸ் சாலை, சென்னை - 600002.
பெருநிறுவன அலுவலகம்: சுந்தரம் டவர்ஸ், எண் 46, ஒயிட்ஸ் சாலை, சென்னை - 600014.
கிளை அலுவலகம்: S.S. டவர்ஸ், 12/3, 2 தளம், திருவள்ளுவர் சாலை மேற்கு, B.G. நாயுடு ஸ்யூட்ஸ் பின்புக்கம், திண்டுக்கல் - 624 001

சுவாதீன அறிவிப்பு

பிரிவு 13(4)-இன்கீழ் வழங்கப்பட்ட பிற்சேர்க்கை IV அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(1) ஆகியவற்றின்படி

சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலர் கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மாறும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் (SARFAESI) 2002, பிரிவு 13(12)-இன் கீழும் அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 3-இன் கீழுள்ள உரிமைகளைப் பயன்படுத்தியும் பிரிவு 13(2)-இன் கீழான **03.06.2026** நாளிட்ட கோரிக்கை அறிவிப்பினைக் கடன்தாரர்: **திரு. சீனிவாசன் P, கூட்டுக் கடன்தாரர்கள்: திருமதி பேச்சியம்மாள் P** ஆகியோருக்கு அனுப்பி அதில் குறிப்பிட்டுள்ள கடன் கணக்கு எண் STU20240097-இன் பேரில் நிலுவையிலுள்ளதும் வர வேண்டியுள்ளதுமான **03.06.2026 நாள்படி ரூ.7,85,497/- (ரூபாய் ஏழு இலட்சத்து எண்பத்தைந்தாயிரத்து நானூறு தொண்ணூறு ஏழு மட்டும்)** மற்றும் தொகை பெறப்படும் நாள் வரையிலான மேலவட்டி, செலவினங்கள் மற்றும் இதர கட்டணங்கள் முதலானவை ஏதும் செலுத்தப்பட வேண்டியிருப்பின் அவை உட்பட அனைத்தையும் செலுத்தப்பட நாளிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரியிருந்தார்.
கடன்தாரர்(கள்) அத்தொகையை மேலே குறிப்பிட்டபடி செலுத்தத் தவறியபடியால் கடன்தாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், அதிகாரப்பூர்வ அலுவலர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) மாறும் அதனுடன் SARFAESI சட்டம் விதி 8-இன் கீழ் தமக்குள்ள உரிமைகளைப் பயன்படுத்திக் கீழே குறிப்பிட்டுள்ள சொத்தை **26.08.2026** அன்று தனது சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டுள்ளார்.
மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13, உட்பிரிவு (8)-இன்படி கடனீட்டுச் சொத்துக்களை மீட்கக் கடன்தாரருக்கு இதன் மூலம் அழைப்பு விடுக்கப்படுகிறது.
எனவே கடன்தாரர்களுக்குக் குறிப்பாகவும் பொதுமக்களுக்குப் பரவலாகவும் இதன் மூலம் எச்சரிக்கையிடுவது யாதெனில், அச்சொத்தின் மீது எந்தவொரு பேரமோ ஒப்பந்தமோ வைக்குக் கொள்ள வேண்டாம். மீறினால் அது **26.08.2026 நாள்படியான ரூ.8,55,368/- (ரூபாய் எட்டு இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரத்து முந்நூற்று அறுபத்தெட்டு மட்டும்)** மற்றும் தொகை பெறப்படும் நாள் வரையிலான மேலவட்டி, செலவினங்கள் மற்றும் இதர கட்டணங்கள் ஏதும் செலுத்தப்பட வேண்டியிருப்பின் அவை உட்பட அனைத்தையும் சேர்த்து சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்துக்குச் செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும்.
சொத்தின் அட்டவணை: திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் பதிவு மாவட்டம், வத்தலக்குண்டு சார்பதிவு அலுவலக வட்டாரம், தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், கெங்குவார்பட்டி கிராமம், செங்குளத்துப்பட்டி, காளியம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த தண்ணீர் தொட்டி அருகில், மனைவரி பட்டா எண் 3419, பழைய நத்தம் சர்வே எண் 3070/3, தற்போதைய புதிய நத்தம் சர்வே எண் 3070/23, பரப்பளவு 1119 சதுர அடி (0.01.04 சதுர மீட்டர்) இதில் புதிதாகக் கட்டப்பட்ட வீடு மற்றும் வீட்டின் அனைத்து இதர வழக்கமான உரிமைகள் உட்பட. **எல்லைகள்:** வடக்கு: தெரு, தெற்கு: சர்வே எண் 3070/3-இல் உள்ள காடு, கிழக்கு: சர்வே எண் 3070/22-இல் உள்ள பெருமாமி சொத்து, மேற்கு: சர்வே எண் 3070/24-இல் உள்ள பாண்டீஸ்வரி சொத்து. **அளவுகள்:** கிழக்கு மேற்காக வடக்கில் மற்றும் தெற்கில் - 26 அடி, வடக்குத் தெற்காக கிழக்கில் மற்றும் மேற்கில் - 43.04 அடி, பரப்பளவு 1119 சதுர அடி. இந்த அட்டவணைச் சொத்து விற்பனை ஆவண எண் 3427/2023-இன்கீழ் பதிவுசெய்யப்பட்டது.

நாள்: 26.08.2026
சுந்தரம் ஹோம் ஃபைனான்ஸ் லிட்., சார்பில் அதிகாரப்பூர்வ அலுவலர்

ஞாயிறுதோறும் தினமணியுடன்... கொண்டாட்டம்

GOVERNMENT OF TAMIL NADU
PROJECT DEVELOPMENT GRANT FUND (PDGF)
INVITATION FOR PROPOSAL (IFP)
Consulting Services
Ref: TNUIFSL/PDGF/GoTN/Slaughterhouse/2026

1. Project Development Grant Fund (PDGF) intends to appoint a firm to provide the following consulting services as detailed in the table given below:

S. No.	Description of Services	Estimated Value incl. GST in Rs.	EMD in Rs.	e-Tender Submission last date	e-Tender Opening date
1	Consulting Services for preparation of the Detailed Project Report (DPR) for construction of Modern Slaughterhouses with Effluent Treatment Plant (ETP) facilities for Coimbatore, Madurai, Salem, Tiruppur, Tambaram and Tiruchirappalli City Municipal Corporations	90,00,000/-	90,000/-	29-09-2026 up to 11.00 AM	29-09-2026 at 3.00 PM

2. The assignment is open to all eligible firms. The Request for Proposals (RFP) may be downloaded and used free of cost from the website viz. www.tntenders.gov.in.
3. A pre-proposal conference will be held on 07.09.2026 at 11.00 am in the office of TNUIFSL, to clarify queries, if any as stated in the RFP.
4. Proposals complete in all aspects must be submitted online through the Tamil Nadu e-Procurement website, as specified in the RFP.
5. Any Clarifications, Minutes of Pre-proposal meeting, Extension of time and Addendum & Corrigendum issued will be uploaded only in the Tamil Nadu e-Procurement website. Other details are available in the RFP.

DIPR/2690/TENDER/2026
Managing Director
TNUIFSL, Fund Manager of PDGF

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
உசிலம்பட்டி நகராட்சி, உசிலம்பட்டி
ந.க.எண். 1580/2023/இ1 — **ஒப்பந்தப்புள்ளி அழைப்பு** — நாள்: 25.08.2026

நாம்மை இந்திய திட்டம் (நகர்புறம்) 2025-26-இன் கீழ் உசிலம்பட்டி நகராட்சியில் 1 எண்ணம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (Sewage Treatment plant (STP)) மற்றும் 1 எண்ணம் இடைமறித்தல் மற்றும் திசை திருப்புதல் பணி மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இணையதளத்தின் வாயிலாக ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.
1. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான விபரங்களை https://tntenders.tn.gov.in என்ற இணையதள முகவரியில் பார்வையிடலாம்.
2. நகராட்சியில் 1 எண்ணம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (Sewage Treatment plant (STP)) மதிப்பீடு ரூ.910.00 இலட்சம் மற்றும் 1 எண்ணம் இடைமறித்தல் மற்றும் திசை திருப்புதல் பணி மதிப்பீடு - ரூ.147.00 இலட்சம்.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை https://tntenders.tn.gov.in என்ற இணையதள முகவரியில் 31.08.2026 முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. ஒப்பந்ததாரர்கள் முன் கலந்தாய்வு கூட்டம் 07.09.2026 அன்று முற்பகல் 11.00 மணியளவில் உசிலம்பட்டி நகராட்சியில் வைத்து நடைபெறும்.
5. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் 16.09.2026 அன்று பிற்பகல் 03.00 மணி வரை
6. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 16.09.2026 அன்று பிற்பகல் 03.30 மணி வரை.
7. ஒவ்வொரு பணியின் மதிப்பீட்டு தொகை மற்றும் டேவணித்தொகை ஒப்பந்ததாரருக்கான தகுதி உள்ளிட்ட விபரங்களை ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை பார்வையிட்டு தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ./ 2592 /ஒப்பந்தப்புள்ளி/2026
ஆணையாளர், உசிலம்பட்டி நகராட்சி

பெருநகர சென்னை மாநகராட்சி
பேருந்து தடசாலைகள் துறை
பே.த.சா.து.ந.க.எண்.பி4/2888/2026
மின்னணு திறந்த வெளி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
கண்காணிப்புப் பொறியாளர் / பே.த.சா.து அவர்களால் கீழ்க்கண்ட பணிகளுக்கு இரு உறை முறையில் திறந்த வெளி மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

மண்டலம்-4, வார்டு - 34, 35 (ம) 46ல் உள்ள 14 எண்ணிக்கையிலான உட்புற மற்றும் பேருந்து தட சாலைகள் தார் சாலைகள், சிமெண்ட் கான்கிரீட் மற்றும் இன்டர்லாக் பேவர் பிளாக்குகள் மேம்படுத்தும் பணிக்கு	
பணியின் உத்தேச தொகை : **ரூ.512.73 இலட்சம்,** முன் வைப்பு தொகை : பணித் தொகையில் 1%	
ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **16.09